BRAMPTON

**Media Release**

உடனடி வெளியீட்டுக்காக

**ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகமானது புகை உமிழ்வு அறவே இல்லாத பேருந்துகளுக்கு ஆதரவளிக்கும் விதமாக வட அமெரிக்காவிலேயே மிகப்பெரிய மின்சாரப் பேருந்து தயாரிப்பு தொழிற்சாலையை அமைக்க திட்டம் வகுத்துள்ளது**

ப்ராம்ப்ட்டன், ON (ஜூன் 12, 2020) – ஜூன் 10, 2020 அன்று, ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்து சேவையில் முழுமையாக மின்சாரத்தில் இயங்கும் பேருந்துகளுக்கான பராமரிப்பு மற்றும் நிறுத்துமிடங்களுக்கான பணிமனை அமைக்கும் திட்டத்திற்கு, ப்ராம்ப்ட்டன் நகர சபை ஒப்புதல் அளித்தது; இது, ப்ராம்ப்ட்டன் நகரத்தை பசுமை நகரமாக இருக்க வைப்பதற்கான உறுதிப்பாட்டினை எடுத்துக்காட்டுகின்ற ஒரு *மைல்கல்* ஆகும். ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்தின் இந்த மூன்றாவது பணிமனையானது, எதிர்காலத்தில் புகை உமிழ்வு அறவே இல்லாத, முழுக்க முழுக்க மின்சார பேருந்துகளை மட்டுமே கொண்டபடி இருக்கும் வகையில் கட்டப்பட்ட, வட அமெரிக்காவின் மிகப்பெரிய புதிய பேருந்து பணிமனைகளில் ஒன்றாக இருக்கும்.

இந்த புதிய பணிமனையானது 2022 ஆம் ஆண்டு தொடங்கி இரண்டு கட்டங்களாக நிர்மாணிக்கப்பட இலக்கு வைக்கப்பட்டுள்ளது; இதில் கட்டம் 1 என்பது 2024 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் நிறைவடையும் என மதிப்பிடப்பட்டுள்ளது. புதிய பணிமனையின் கட்டம் 1 சுமார் 250 பேருந்துகளுக்கு இடமளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது; 2 ஆம் கட்டம் கூடுதலாக 188 பேருந்துகளுக்கு இடமளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆகமொத்தம் 438 பேருந்துகள். முழு மின்மயமாக்கல் தேவைகள் உள்ளிட்ட இந்த பணிமனையை நிர்மாணிப்பது என்பது, அரசாங்கத்தின் பிற மட்டங்களிலிருந்து நிதியுதவியைப் பெறுவதைச் சார்ந்து உள்ளது.

வடிவமைப்பு-செயல்முறை மற்றும் தேவையான நிதி கிடைக்கும் தன்மைக்கு ஏற்ப அமைய விருக்கும் இந்தப் பணிமனையில் அடங்கும் அம்சங்கள் பின் வருமாறு, ஆனால் இவை மட்டுமே அல்லாதனவும் இருக்கலாம்:

- புகை-உமிழ்வு அறவே இல்லாத, பேட்டரியில் இயங்குகின்ற-மின்சார பேருந்துகளை இயக்க, உயர் ஆற்றல் கொண்ட (600 கிலோவாட்-ஹவர்) மேல்நிலை பான்ட்டோகிராப் பாணியிலான சார்ஜர்கள் மற்றும்/அல்லது இரவு நேரத்தில் மின்சார பிளக்-இல் செருகி சார்ஜ் ஏற்றிக்கொள்ளும் வகையிலான சார்ஜர்கள்.

The Corporation of The City of Brampton
2 Wellington Street West, Brampton, ON L6Y 4R2 311 TTY: 905.874.2130

- புகை-உமிழ்வு அறவே இல்லாத, பேட்டரியில் இயங்குகின்ற,மின்சார பேருந்துகளை இயக்க, எதிர்காலத்தில் அமைய இருக்கும் ஹைட்ரஜன் சேமிப்பு கொள்கலன்கள் மற்றும் / அல்லது ஹைட்ரஜன் உற்பத்திக்கான கருவிகளைக் கருத்தில் கொள்வது.
- உச்ச-பட்ச மின்சார சேமிப்பு மற்றும் புத்திசாலித்தனமான மின்சார க்ரிட் (grid) மேலாண்மை உள்ளிட்ட, இயன்றவரையிலான ஆற்றல் செயல்திறனை வழங்கும்வகையிலான, ஆன்-சைட் மின்சக்தி சேமிப்பு திறன்.
- மின்சார பேருந்துகள் அனைத்துக்கும் தேவையான மின் தேவைக்கு துணை நிற்கும் வகையில், துணை மின்நிலையங்கள் (எ.கா. 20 மெகாவாட்).
- பராமரிப்பு பிரிவில் உயர் மின்னழுத்த அமைப்புகளின் பழுது நீக்கலுக்கு உதவும் வகையில், பணிமனையில் இதற்கென அர்ப்பணிக்கப்பட்ட பகுதிகள்; மற்றும் முழுக்க முழுக்க மின்சாரத்தில் இயங்கும் பேருந்துகள் அனைத்தையும் ஆதரிக்க தேவையான சிறப்பு பராமரிப்பு உபகரணங்கள் மற்றும் கருவிகள்.

இந்த பணிமனை கட்டுமானம் செய்வதில், முதல் கட்டத்தில் மின்மயமாக்கல் தேவைகளுக்கான தற்போதைய உயர்ந்தபட்ச செலவு மதிப்பீடானது $ 120- $ 150 மில்லியன் ஆகும். இதில் புகை-உமிழ்வு அறவே இல்லாத பல பேருந்துகளை அறிமுகம் செய்து, கொள்முதல் செய்யத் தேவையான கூடுதல் முதலீடுகள், அல்லது சாலைகளில் உள்ள மின்சார்ஜர்கள் மற்றும் பவர் கிரிட் மேம்பாடுகள் போன்ற சொத்துக்கள் அல்லாமல் இன்னும் தேவைப்படும் கூடுதல் உள்கட்டமைப்பு ஆகியவற்றின் மதிப்பு இதில் சேரவில்லை.

வளர்ச்சிக்கான புதிய பேருந்துகள் மற்றும் மாற்றி வைப்பதற்கான பேருந்துகள் அவ்வப்போது வாங்கப்படும்; இது எப்படியென்றால், கனடா உள்கட்டமைப்பு திட்ட (ICIP) த்தில் முதலீடு செய்யப்படுதல் மற்றும் பிற நிதிகள் உள்பட ப்ராம்ப்ட்டன் நகருக்கு 10 ஆண்டுகளுக்கு என்ன தேவை என்பதற்கான முன்கூட்டிய மூலதனத் தேவை பற்றிய கணிப்பு, மற்றும் அவற்றுக்கான வரவு செலவுத் திட்டங்கள் அங்கீகரிக்கப்படுதல் ஆகியவற்றின் அடிப்படையில் செய்யப்படும்; அப்படி வாங்கப்பட்ட மின்சார பேருந்துகள் அந்தந்த இடத்தில் இயங்க அறிமுகப்படுத்தப்படும்.

இந்தப் புதிய பணிமனைக்கான வடிவமைப்பு செய்தல் மற்றும் நிதியுதவி பெறுவதில் முன்னேறிச் செல்வதற்காக, ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகமும் ப்ராம்ப்ட்டன் நகர சபையும் நெருக்கமாக இணைந்து செயல்படுகின்றன. தற்போதுள்ள பயணிகள் எண்ணிக்கை, கடந்த மூன்று ஆண்டுகளில் ஏற்பட்ட மக்கள் தொகை வளர்ச்சி, மற்றும் எதிர்கால வளர்ச்சியைக் கணித்தல், ஆகியவற்றின் அடிப்படையில், இந்த புதிய போக்குவரத்து பேருந்து பணிமனையானது, ப்ராம்ப்டனுக்கு மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக இருக்கும்.

இந்த மூன்றாவது பணிமனை மீதான அறிக்கையைப் பற்றிமேலும் தெரிந்துகொள்ள இங்கு க்ளிக் செய்யவும் .

**பின்புலம் – 2021 ஆம் ஆண்டில் ப்ராம்ப்ட்டன் நகருக்கு வரவிருக்கின்ற மின்சாரப் பேருந்துகளுக்கான முன்னோட்ட திட்டப்பணி**

பேருந்து போக்குவரத்தில் ஒரு மைல் கல்லாக விளங்குகின்ற பான்-கனடியன் மின்சார பேருந்து செய்முறைவிளக்கம் மற்றும் ஒருங்கிணைப்புக்கான சோதனை முயற்சியை, மேயர் பேட்ரிக் பிரவுன் அவர்கள் 2019 ஆம் ஆண்டு ஜூலை மாதம், ப்ராம்ப்ட்டன் நகர சபை சார்பாக வரவேற்றார்; இதில் கனடா அரசு மேற்கொண்ட முதலீடானது ஒரு குறிப்பிடத்தக்க விஷயமாகும்.

சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்திற்கான அமைச்சராகிய மாண்புமிகு கேத்தரின் மெக்கென்னா அவர்கள், இந்த முன்னோடி திட்டத்தின் முதல் கட்டத்திற்கு 11.15 மில்லியன் டாலர் நிதியுதவி அறிவித்தார்; இது ப்ராம்ப்ட்டன் நகரில் பேட்டரி மின்சார பேருந்துகளை பரிசோதனை செய்யும்.

உலகளாவ, தனது வகையில் முதலாவதாகிய இந்த ஒருங்கிணைப்பு திட்டமானது, இவர்களுடைய கூட்டு முயற்சியின் விளைவாகும்: ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்து, மற்றும் கனேடிய நகர்ப்புறப் போக்குவரத்து ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்பு கூட்டமைப்பு (CUTRIC), முழுக்க முழுக்க மின்சார பேருந்துகளின் உற்பத்தியாளர்களாகிய நியூ ஃப்ளையர் இண்டஸ்ட்ரீஸ், மற்றும் நோவா பஸ் நிறுவனம், மின்சார சார்ஜ் ஏற்றுவதற்கான நிலையங்கள் தயாரிப்பவர்களாகிய ஏபிபி மற்றும் சீமென்ஸ் நிறுவனங்கள். முன்னெப்போதும் இருந்திருக்காத இந்த முயற்சியில் அரசின் பல அதிகார நிலைகள், பேருந்து மற்றும் சார்ஜர் உற்பத்தியாளர்கள், கட்டமைப்பு ஒருங்கிணைப்பாளர்கள், கல்வியாளர்கள் மற்றும் நிதி பங்களிப்பாளர்களை ஒன்றாக இணைத்து, ப்ராம்ப்ட்டன் நகரில் மின்சார பேருந்துகள் இயக்குவதை நடமுறைப்படுத்தவுள்ளனர்.

ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்து என்பது சுற்றுச்சூழலைப்போற்றி பராமரிப்பதில் ஒரு முன்னணி அமைப்பாக உள்ளது; 125 எண்ணிக்கை கொண்ட டீசல்-எலக்ட்ரிக் கலப்பின ஸூம் பேருந்துகள் கொண்ட இதன் தொகுப்பில், இன்றைய தேதிக்கு, இவை (மின்சார பேருந்துகள்) 28 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்றன.

**அறிஞர் கூற்றுக்கள்**

“ நிலையானதொரு போக்குவரத்து வசதியைப் பொருத்தவரை, ப்ராம்ப்ட்டன் நகரம் முன்னணி வகிக்கிறது. கனடா நாட்டின் புதுமை படைக்கும் பாதையில், ப்ராம்ப்ட்டனின் நிலையை நிலைநாட்டுவதற்கு நன்கு இணைக்கப்பட்ட, நீடித்து நிலைக்கவல்ல போக்குவரத்து நெட்வொர்க் முக்கியமானது; இதுபோன்ற முன்னோக்கு சிந்தனை கொண்ட கவுன்சிலின் ஒரு அங்கமாக இருப்பதில் நான் பெருமைப்படுகிறேன். எங்கள் காலநிலை மாற்ற இலக்குகளை

அடைவதை நோக்கி நமது நகரத்தை  செலுத்த, இந்த உறுதியான செயல்படிகள் உதவுகின்றன; சேவையில் ஈடுபடுத்தப்படும் பேட்டரி-மின்சார பேருந்து ஒவ்வொன்றின் மூலமாக, ஆண்டுக்கு சுமார் 235 டன் கார்பன்-டை-ஆக்ஸைட் உமிழ்வுகள் வராமல் தடுக்கப்படுகின்றன.

ப்ராம்ப்ட்டனுக்கு புகை உமிழ்வு அறவே இல்லாத பேருந்துகளை கொண்டுவருவதற்கும், எங்கள் குடியிருப்புவாசிகளுக்கு  சிறந்ததொரு போக்குவரத்து அமைப்பைக் கொண்டு சேவை செய்வதற்கும், நாங்கள் கூட்டு  அரசாங்கத்துடன் எங்கள் கூட்டுறவைத் தொடர்கிறோம். ”

- *பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

“ எதிர்காலத்தில் தனது வகையில் ஒரு முழுமையான மின்சார போக்குவரத்து பேருந்து வசதியை உருவாக்குவது, மற்றும் முழுக்க முழுக்க புகை உமிழ்வு அறவே இல்லாத பேருந்துகள் கொண்ட தொகுப்பிற்கு மாறுவது ஆகிய இவ்விரண்டும்,  கார்பன் தடம் இல்லாமல் போகச் செய்வதற்கும் பசுமை நகரத்தை உருவாக்குவதற்குமான கவுன்சிலின் உறுதிப்பாட்டுக்கு வலுச்சேர்க்கிறது. ப்ராம்ப்ட்டனில் இப்போது உருவாகும் புகை உமிழ்வை *2050* ஆம் ஆண்டில் *80* சதவீதம் அளவுக்கு, குறைப்பதற்கான எங்கள் கிரீன்ஹவுஸ்-ஐ நோக்கிய பயணத்தில் இது ஒரு மைல்கல் ஆகும்.”

- *ரொவீனா சான்ட்டோஸ், பொராந்திய கவுன்சிலர் வார்டுகள் 1 & 5; Chair, சமுதாய சேவைகள், ப்ராம்ப்ட்டன் நகரம்*

“ப்ராம்ப்ட்டன் நகரமானது, ஒரு நிலைத்து நிற்கவல்ல, மற்றும் ஆற்றல் திறன் கொண்ட பேருந்து போக்குவரத்து கட்டமைப்பை உருவாக்குவதற்கு, புதுமையான மற்றும் நடைமுறை தீர்வுகளைக் கண்டறிவதில் உறுதியாக உள்ளது. இதுவே கவுன்சிலுக்கு தலையாய விஷயமாகும், மேலும் புகை உமிழ்வைக் குறைத்து பசுமை இல்லம் ஆக்குவதற்கும் , எரிசக்தி பாதுகாப்பை உறுதி செய்வதற்கும், பொருளாதார பலன்களை ஏற்படுத்துவதற்கும், மற்றும் காலநிலை மாற்றத்தில் எதிர்ப்புக்கான விடாமுயற்சியை அதிகரிப்பதற்கும் நாங்கள் தொடர்ந்து வழிகளை உருவாக்கி வருகிறோம். ”

- *டேவிட் பேர்ரிக், தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 650,000 மக்களையும் 70,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது**. நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும்,  சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான  ஆரோக்கியமிக்க ஒரு நகரைக்

கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். Twitter, Facebook, மற்றும் Instagram ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். www.brampton.ca இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் பரிமாற்றம்
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca